**பாலிந்தநுவர பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 25 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாலிந்தநுவர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சம்பளக் கணக்கில் ரூபா 52,995 தொகையான கழிப்பனவுகள் வேறு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டிருந்த சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 306,804 தொகை மீளாய்வாண்டின் போது சீராக்கப்படுகையில் ரூபா 385,063 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் திரண்ட நிதியம் ரூபா 78,259 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் சம்பள மீளளிப்பு வருமானம் கணக்கீடு செய்யப்படுகையில் ஆரம்ப மீதி ரூபா 70,000 தொகையும் இறுதி மீதி ரூபா 20,000 தொகையும் வருமானத்திற்குச் சீராக்கப்பட்டிராமையால் அங்கத்தவர் படிப்பண ஆரம்ப மீதி ரூபா 301,000 தொகையும் இறுதி மீதியான ரூபா 153,000 தொகையும் சீராக்கப்பட்டிராமையாலும் மீளாய்வாண்டில் ஏனைய மானிய வருமானம் ரூபா 198,000 தொகையால் அதிகரித்திருந்தது.

(ஈ) ரூபா 78,000 தொகையான 2 படகுகள் மூலதனமாக்கப்படுகையில் மோட்டார் வாகன மற்றும் வண்டிக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக கைத்தொழில் களஞ்சிய இருப்புக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) பெறுமதி சேர் வரிக் கணக்கின் மீதியை பதிவழிக்கையில் ரூபா 192,290 தொகையான திரண்ட நிதிக் கணக்கிற்குப் பதிவு செய்யப்படுவதற்குப் பதிலாக தொங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) இடிதாங்கி இயந்திரத்தின் பெறுமதி ரூபா 85,000 தொகை குறைவாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டில் சந்தை வரி வைப்புத் தொகையான ரூபா 159,583 மீளாய்வாண்டின் போது வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் வைப்புக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிராமையால் அதே பெறுமதியால் வைப்பு மீதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) பேரேட்டுக் கணக்கின் படி, செலவினக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 6,408,043 தொகையான போதிலும், ஐந்தொகைக்கு அப் பெறுமதி ரூபா 6,337,873 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 70,170 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) பேரேட்டுக் கணக்கின் படி, ரூபா 102,303,790 தொகையான கைத்தொழில் உதவிப் பணம் பட்டியல் இடப்படுதல் மற்றும் கைத்தொழில் செலவினம், வருமானச் செலவினக் கணக்கில் பதிவு செய்யப்படாது ஒன்றுடன் ஒன்று பதிவழிக்கப்பட்டிருந்தன.

(ஒ) கைத்தொழில் பதிவேட்டின் படி, மீளாய்வாண்டின் இறுதியிலான வருமான உதவிக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 44,751,069 தொகையான போதிலும், பேரேட்டுக் கணக்கின் படி, அம் மீதி ரூபா 58,661,040 தொகையானமையால் ரூபா 13,909,971 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஓ) கைத்தொழில் பதிவேட்டின் படி, மீளாய்வாண்டின் இறுதியிலான அரசாங்க மானியக் கடன்கொடுத்தோர் கணக்கு மீதி ரூபா 44,751,069 தொகையான போதிலும், பேரேட்டுக் கணக்கின் படி, அம் மீதி ரூபா 68,737,546 தொகையானமையால் ரூபா 23,986,477 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) 2014 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான ரூபா 1,126,944 தொகையான தளபாட உபகரணங்கள், ரூபா 3,088,350 தொகையான மோட்டார் வாகன மற்றும் வண்டி, ரூபா 3,488,243 தொகையான இயந்திர உபகரணங்களுமாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 7,703,537 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,114,077 தொகையான செலவினங்கள் கடன்கொடுத்தோர் மீதிக்கு உரித்தான தனியான மீதிகள் வெளிப்படுத்தப்படும் பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,051,193 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,388,534 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுப் பற்றாக்குறை.'. குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) காசோலைகளின் மூலம் மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல்வாங்கல்களுக்காகவும் தமது வங்கி மீதி போதுமானதா என கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தரால் ஆராய்ந்தறிய வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது மீளாய்வாண்டின் சனவரி முதல் திசெம்பர் வரையான சகல மாதத்தின் போதும் காசேட்டில் வங்கி மேலதிகப் பற்று ஒன்று ஏற்படும் வகையில் காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 1997 முதல் 2012 வரையான காலத்திற்கு உரித்தாக ரூபா 389,267 கூட்டுத்தொகையான வைப்பைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 2,161 | 1,948 | 376 |
| (ii) | வாடகை | 4,080 | 3,848 | 439 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 178 | 178 | -- |

**2.3.2 கடை குத்தகைக்கிடல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சந்தை வளாகத்தில் (இரண்டாம் கட்டம்) கடைகளை ஒதுக்குவதற்கு 2009 திசெம்பர் 11 ஆம் திகதி கேள்வி கோரப்பட்டிருந்தது. சபை அங்கீகரித்த கேள்வித் தொகையான ரூபா 825,000 இற்கு மேற்பட்டிராமையால் 03 கடைகளுக்கான கேள்வி 07 நாட்களுக்குள் பிரதேச அளவில் பிரசித்தப்படுத்தப்பட்டு மீள கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது 2010 திசெம்பர் 15 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது மாதாந்த வாடகை அடிப்படையில் வாடகைக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) 2013 மே 28 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் தீர்மானத்தின் படி, இதில் ஒரு கடை மீள வேறு ஓர் நபருக்கு 2014 சனவரி 02 ஆம் திகதி முதல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம், வைப்பாக அறவிடப்பட வேண்டிய 03 மாத வாடகை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கடையை வேறோர் நபருக்கு ஒப்படைக்கப்படுகையில் ஒப்படைப்புக் கட்டணமாக ரூபா 75,000 தொகை சபைக்குச் செலுத்த வேண்டியதாக பொதுக கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அக் குத்தகையாளர்களிடம் இருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களின் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படல்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ள ஹொட்டேல், சிற்றுண்டிச் சாலை ஆகியவற்றில் இருந்து 1 சதவீத வரித் தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும் 2006 ஆம் ஆண்டு முதல் ஓய்வு விடுதி ஒன்றில் இருந்து வரித் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 3,965,734 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 5,752,922 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

#### (அ) ஊழியர் பிணை

உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2004 யூன் 09 ஆம் திகதிய எல்ஜீ/05/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் படியும் 1992 சனவரி 29 ஆம் திகதிய 3/4/1 ஆம் இலக்க மேல் மாகாண பிரதம செயலாளரின் கடிதத்தின் பிரகாரம், சபையில் பிணை வைக்கப்பட வேண்டிய 21 ஊழியர்களிடம் இருந்து பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) சீருடைக் கொடுப்பனவு வழங்கல்

மீளாய்வாண்டில் சபையின் 45 ஊழியர்களுக்காக 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளுக்காக சீருடைக் கொடுப்பனவாக ரூபா 360,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் சீருடையை 08 ஊழியர்கள் மாத்திரமே அணிந்திருந்தமை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி அவதானிக்கப்பட்டது.

#### (இ) தண்டப் பணம்

2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான கால எல்லைக்குள் உணவு மாதிரிகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிற்கான தண்டப்பணமாக நீதிமன்றத்தால் அறவிடப்பட்டிருந்த ரூபா 69,000 தொகையான பணத்தில் சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டியிருந்த 75 சதவீத அளவான ரூபா 51,750 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 08 ஆம் திகதி வரையிலும் தருவிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

வீட்டிற்கு வீடு கிராமத்திற்குக் கிராமம் மாகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2014 இன் கீழ் பதுரெலிய கைப்பந்து விளையாட்டு மைதானம் ரூபா 1,461,678 தொகையான மதிப்பீட்டின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.
மதிப்பீட்டின் பணி விடய இல. 13 இன் பிரகாரம் மைதானத்திற்காக உயர் தரத்திலான 08 மின் விளக்குகள் வழங்கப்பட்டு பொருத்தப்படுவதற்காக ரூபா 280,000 தொகை மதிப்பிடப்பட்டு இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் படி உரிய தொகை செலுத்தப்பட்டிருந்தது. 03 மின்விளக்குகளுடனான 04 விளக்குகளும் 04 பிளாஷர்களும் பொருத்தப்பட்டிருந்தமை 2015 யூன் 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2014 நவம்பர் மாதம் திவிநெகும திணைக்களத்தின் மூலம் சபையின் கோரல் இன்றி 720 ஜீ1 குழாய்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அக் குழாய்களின் மூலம் வலல்லாவிட்ட பிரதேச சபைக்கும் அகலவத்த பிரதேச சபைக்கும் முறையே 210 குழாய்களும் 128 குழாய்களும் வழங்கப்பட்டிருந்தன. கணக்காய்வுத் தினமாகிய ஏப்ரல் 07 ஆம் திகதி வரையில் 118 குழாய்கள் மாத்திரம் பாலிந்தநுவர பிரதேச சபையில் காணப்பட்டன.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) செலவினக் கட்டுப்பாடு
(ஈ) சொத்து முகாமைத்துவம்